1978 மார்ச் 1]

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் பின்தங்கியவர்கள் என்றும் பாகுபடுத்தி, அவர்களுக்கு ஊதிய வரம்பை உயர்த்தித் தருகின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு ஊழியர்களின் பிள்ளைகளும் மற்றவர்களும் உதவித்தொகைகளை தகுதியினர் அடிப்படையில் ஆண்டு வருமானம் ரூ. 3,000க்கு அதிகப்படாமல் இருந்தால் பெறுவதற்கு மாநில அரசு உத்தரவு தற்பொழுது அமுலில் உள்ளது. திறமையின் அடிப்படையில் வழங்கும் மேற்கண்ட உதவித் தொகைகளுக்கு வருமான வரம்பை ரூ. 5,000-க்கு உயர்த்தும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, விவசாயிகளுடைய குழந்தைகளெல்லாம் உயர்கல்வி படிக்கின்ற வகையில் அவர்களுடைய பெற்றோர்களுடைய வருமான வரம்பை உயர்த்தவும் அதே நேரத்தில், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உதவித் தொகை குறைவாக இருப்பதால், உதவித் தொகையை அதிகரிக்கவும் இந்த அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதைக்கு அப்படி ஒரு யோசனை இல்லை.

Stadium in Dharmapuri district.

*331 Q.—Dr. K. SAMARASAM : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(a) whether there is any proposal to construct an out-door stadium in Dharmapuri district ; and

(b) if so, the steps taken so far ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;— (அ) இல்லை.

(ஆ) இவ் வினுவிற்கு இடமில்லை

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே உள்ள விளையாட்டு வீரர்கள் மாவட்ட, மாநில, இந்திய அளவு மட்டுமல்லாமல் உலக அரங்குகளிலே, பல விளையாட்டுக்களிலே கலந்துகொண்டு, பல வெற்றிகள் பெற்றிருக்கிறார்கள். இத்தகைய விவேகமும், வீரமும் மிக்க அவர்களை ஊக்குவிக்க, அம்மாவட்டத்தில் அப்படி ஒரு விளையாட்டு அரங்கை ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 1

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து அப்படி ஒரு திட்டம் வருமானுல், அதைப் பரிசீலிக்கலாம்.

சென்னை புளியந்தோப்பு இறைச்சிக்கூடம்.

* 332 வினு— திரு. சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சென்னை புளியந்தோப்பு பகுதியில் மாநகராட்சி மூலம் கண்காணிக்கப்படும் ஆடு, மாடுகள் வெட்டப்படும் இறைச்சிக் கூடத்தினை நவீன கூடமாக மாற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, அந்தக் கூடமும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதைச் சீர்படுத்தத் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது சென்னைக்கு 25 மைல் தொலைவில் உள்ள திருவள்ளூர் சாலையில் ரெட்ஹில்ஸ் அருகிலுள்ள கொடிவெள்ளி கிராமத்தில் நவீன முறையில் அதை அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, புளியந்தோப்பில் உள்ள ஆடு மாடுகள் வெட்டும் நிலையத்தில் அந்த ஆடு மாடுகளுக்கு வியாதி, நோய் உள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காக எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய விவரம் இல்லை.

ஸ்டான்லி மருத்துவமனை அருகே புதிய சுரங்கப்பாதை

*333 வினு— திரு. அ. செல்வராசன், திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை (புறநோய்ப் பிரிவு அருகில் இருக்கும் M. C. ரோட் ரயில் பாதையின் குறுக்கே ஒரு சுரங்கப்பாதை (Subway) ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?